DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 110/2021

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : | இராஜகோபால் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| **Taluk** | **:** | | **Age:** |

Accused absent. Petition filed u/s.317 Cr.P.C and allowed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 28.03.2024

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் மேலச்செல்வனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விவசாயம் செய்து வருகிறேன். அ.சா–1 எனது மனைவி. அ.சா–2 எங்கள் ஊரைச் சேர்ந்தவர். எதிரியை தெரியும். சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எனது மகன் பிரச்சனை சம்மந்தமாக எனது மனைவியும் நாகேஸ்வரி என்பவரும் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

2. அப்போது குணசேகரன் வந்து கையால் எனது மனைவியினை வலது கையை பிடித்துக்கொண்டு தேவிடியா மகளே, என்று அசிங்கமாக பேசி கீழே தள்ளிவிட்டார். நான் சம்பவத்தை பார்த்து ஓடிவந்தேன். கீழே விழுந்ததில் எனது மனைவியின் இடது பக்க தொடையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. நான் குணசேகரனிடம் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டேன். அதற்கு என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்.

3. எனது மனைவி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்லவில்லை. ஊரில் உள்ளவர்களிடம் பேசி கொள்ளலாம் என்று இருந்து விட்டோம். மறுநாள் காவல் நிலையத்தில் குணசேகரன் மீது எனது மனைவி புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் போதுமான சந்தர்ப்பம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.